உதயம் 22 தாரகை 6

பனிமயம்

*நிர்வாகி & வெளியிடுபவர்*
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

*ஆசிரியர்:*
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | |
|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் பின் பக்க அட்டை | - ரூ. 1000/- |
| உட்புற விளம்பரம் பின் பக்க அட்டை | - ரூ. 1500/- |
| வெளிப்புற விளம்பரம் | - ரூ. 2000/- |

*வடிவமைத்து, அச்சிட்டோர்*
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

*முகவரி :* **'பனிமயம்'**
**தூய பனிமய அன்னை பேராலயம்**
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### துறவறச் சகோதரிகள் மற்றும் திருநிலைப்படுத்தப்பட்ட பெண்களுக்காக...

துறவறச் சகோதரிகள் மற்றும் திருநிலைப்படுத்தப்பட்ட பெண்கள் ஆற்றும் அருள்பணி மற்றும் துணிச்சலுக்காக அவர்களுக்கு நன்றி செலுத்தி, நம் காலத்தின் சவால்களுக்கு அவர்கள் தொடர்ந்து புதிய பதிலிறுப்புகளைக் கண்டுபிடிக்க நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. லூர்து திருத்தலப் புதுமைகள்! ....................4
   அருள் மரி வேந்தன்
2. மரியன்னை புனிதர்கள் :
   புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா ....................6
   அருள்பணி. குமார்ராஜா
3. பனிமய அன்னை ....................8
   தி. சொர்ணராஜன் விக்டோரியா
4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ......10
   செல்வராஜ் மிராந்தா
5. பனிமயம் - மீள்பார்வை ....................12
   கலாபன் வாஸ்
6. நம் திருச்சபை, நமது பெருமை ....................14
   "க்றிஸ் மிலியன்"
7. விவிலியப் போட்டி ....................16
8. பனிமய சாட்சியங்கள் ....................18
9. பனிமயப் பகிர்வு ....................20
10. மாதம் ஒரு மாதா படம் ....................25

**மரியன்னையின் மேன்மைகள் : 24**

# லூர்து திருத்தலப் புதுமைகள்!



உலகின் மிகப் புகழ் பெற்ற மரியன்னைத் திருத்தலம் பிரான்ஸ் நாட்டின் லூர்து திருத்தலம்தான். உலகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான லூர்து கெபிகளே அதற்குச் சான்று.

1858ஆம் ஆண்டு பிப்ரவரி 11 முதல் ஜூலை 16 வரை 14 வயது பெர்னதத்துக்கு அன்னை மரியா காட்சி தந்தார். அப்பொழுதிலிருந்து இத்திருத்தலம் பிரபலமாகிவிட்டது. இதுவரையில் 200 மில்லியன் (20 கோடி) திருப்பயணிகள் அங்கே வந்து சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தற்பொழுது ஆண்டுதோறும் சராசரியாக 35 இலட்சம் திருப்பயணிகள் அங்கே வருகிறார்கள். எண்ணிலடங்காப் புதுமைகள் அங்கே நடைபெறுகின்றன. இருப்பினும், பிரஞ்சு நாட்டுக்கே உரிய அறிவியல் கண்ணோட்டத்துடன் லூர்து திருத்தலத்தின் புதுமைகளை ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழுவைத் (Lourdes Medical Bureau) திருத்தலமே ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவில் புகழ்பெற்ற மருத்துவர்கள், உளவியலாளர்கள் உட்பட பல்துறை வல்லுநர்கள் உள்ளனர். எப்பொழுதெல்லாம் புதுமைகள் நடந்ததாக மக்கள் சொல்கிறார்களோ, அப்போது இக்குழுவினர் அந்த நிகழ்வை மருத்துவ, அறிவியல் வழியில் ஆய்வு செய்கிறார்கள். மருத்துவத்தால் விளக்க முடியாத நிகழ்வுகளையே திருத்தலம் புதுமைகள் என்று அறிவிக்கிறது.

இக்குழுவின் தற்போதைய தலைவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த மருத்துவர் அலெக்சான்ட்ரோ பிரான்சிஸ். ஆண்டுதோறும் சராசரியாக 35 புதுமைகள் நடைபெற்றதாக பதிவு செய்யப்படுகின்றன. அவற்றை இந்த மருத்துவக் குழுவினர் ஆய்வு செய்கின்றனர். பெரும்பாலான குணம் பெறும் நிகழ்வுகளை மருத்துவ முறையில் விளக்க முடிவதால், அவற்றைப் புதுமைகள் என்று அறிவிப்பதில்லை. மிகவும் அரிதான நிகழ்வுகளையே இக்குழுவினர் மருத்துவத்தால் விளக்க முடியவில்லை என்று அறிக்கை தருகிறார்கள். நலம் பெற்றவருடைய மருத்துவ வரலாறு, நலம் பெறுவதற்கு முன்பும், பின்னரும் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே, ஸ்கேன் சான்றிதழ்கள், இரத்தப் பரிசோதனை சான்றுகள், அவர்களது மனநலம் தொடர்பான அறிக்கைகள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. நலமடைந்த மனிதர் மீண்டும் நோய்க்கு ஆளாகவில்லை என்பதை உறுதி செய்வதற்காக இந்த விசாரணைக்கு குறைந்தது 5 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளப் படுகிறது.

இவ்வாறு கடந்த 160 ஆண்டுகளில் நலம் பெற்ற மக்கள் தந்த சாட்சியங்கள் ஏறக்குறைய 7000. அவற்றில் எழுபது நிகழ்வுகளை மட்டுமே அறிவியல் முறையில் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் புதுமைகள் என்று அறிவித்துள்ளது லூர்து திருத்தலம்.

பெல்ஜிய நாட்டவரான பீட்டர் தே ரட்டர் (1822-1898) கால் முறிந்து நடக்க இயலாத இவர் அன்னையின் ஆசியால் நடக்கத் தொடங்கினார். இது லூர்து திருத்தலத்தின் தொடக்க காலப் புதுமைகளுள் ஒன்று.

பிரான்ஸ் நாட்டு 31 வயது செவிலிய மாணவியான ஜீன் ஃப்ரெட்டல் ஏழு ஆண்டுகளாக எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டு, கோமா நிலையில் 1948ஆம் ஆண்டு மே 10ஆம் நாள் கொண்டு வரப்பட்டார். நற்கருணையின் ஒரு சிறிய பகுதியை அவருக்கு ஊட்டினார்கள். உடனடியாக நலம் பெற்றார். நிரந்தரமாக விடுதலை பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இதனைப் புதுமை நிகழ்வாக அறிவித்தது திருத்தலம்.

தண்டு வடப் பாதிப்பினால் 5 ஆண்டுகள் துன்புற்ற ஸ்விட்சர்லாந்து நாட்டு சகோதரர் லியோ ஷ்வேகர் 1952ஆம் ஆண்டு லூர்து திருத்தலம் வந்தார். முழுமையாக நலம் பெற்றார். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1960ல் இதனைப் புதுமையாக அறிவித்தனர்.

சில குணம் பெறும் நிகழ்வுகளை மருத்துவக் குழு நிராகரித்தாலும், மக்கள் நடுவே அவை புதுமையாகவே கருதப் படுகின்றன. முதல் உலகப் போரில் காயமடைந்து, இரு கால்களும் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் கடற்படை வீரர் ஜான் ட்ரெய்னர் (John Traynor 1883-1943) லூர்து நகருக்குத் திருப்பயணமாக வந்தபின்னர் நடக்கத் தொடங்கினார். அவர் நலம் பெற்றதை புதுமை என்று வல்லுநர் குழு அறிவிக்கவில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் லூர்து திருத்தலத்தின் 70ஆவது புதுமை அறிவிக்கப் பட்டது. பக்கவாத நோயினால் பல ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டிருந்த அருள்சகோதரி பெர்னதத் மோரியோ அற்புதமான முறையில் நலமடைந்ததாக 2018 பிப்ரவரி 11 அன்று லூர்து மறைமாவட்ட ஆயரால் அறிவிக்கப்பட்டது.

தற்பொழுது 79 வயதாகும் இத்துறவி 1960ஆம் ஆண்டிலிருந்து தண்டுவடம் தொடர்பான சிக்கலால் பாதிக்கப்பட்டிருந்தார். 1987 முதல் அவரால் நடக்கவே முடியவில்லை. கடந்த 2008ஆம் ஆண்டு அவரை சக்கர நாற்காலியில் வைத்து லூர்து திருத்தலம் அழைத்துச் சென்றார்கள். அங்கே மசபியேல் கெபி முன்பாக உருக்கமாக செபித்தார் சகோதரி பெர்னதத். தாம் நலம் பெறவேண்டும் என்றுகூட அவர் செபிக்கவில்லையாம். தமது நோயை ஏற்றுக்கொண்டு வாழ வலிமை வேண்டும் என்றுதான் வேண்டுதல் செய்திருக்கிறார். பின்னர் தமது கன்னியர் இல்லம் திரும்பிய அவர் நான்கு நாள்கள் கழித்து ஜூலை 11ஆம் நாள் நற்கருணை ஆராதனையின்போது முழு நலம் பெற்றதாக உணர்ந்தார். நாற்காலியைவிட்டு எழுந்து நடக்க ஆரம்பித்தார். எந்த உதவியும் அவருக்குத் தேவைப்படவில்லை.

இந்த நிகழ்வை ஆய்வு செய்த மருத்துவக்குழு 10 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதும் சகோதரி முழு நலத்தோடு இருக்கிறார் என்பதால், இதனைப் புதுமை என்று அறிவிக்கப் பரிந்துரைத்துள்ளது.

நம்பிக்கையோடு லூர்து அன்னையிடம் மன்றாடும் அனைவருக்கும் நலம் தருகிறார் நம் அன்னை. சில நேரங்களில் உடல் நலம், ஆனால் எல்லா நேரங்களிலும் மன ஆறுதல். எனவே, பிள்ளைகளுக்கேயுரிய நம்பிக்கையுடன் நம் அன்னையை நாடிச் செல்வோமாக!

**அருள் மரி வேந்தன்**

51 மரியன்னைப் புனிதர்கள்



# புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா

(1550-1568)

## அன்னையைப் பற்றிக்கொண்ட நவதுறவி!

போலந்து நாட்டின் 17 வயதே நிரம்பிய இளம் புனிதர்தான் புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா. செல்வம் மிக்க ஜான் கோஸ்கா, மார்கரெட் தம்பதியரின் ஏழு குழந்தைகளில் இரண்டாவது மகனாக 28.10.1550 அன்று பிறந்தவர் ஸ்தனிஸ்லாஸ். வியன்னாவில் பள்ளிப் படிப்பின்போது புனித பார்பரா பக்த சபையில் சேர்ந்தார். தனது பக்தியை முன்னிட்டு அனைவரிடமும் நற்பெயர் பெற்றார்.

இளமைப் பருவத்திலேயே காட்சிகள் காணும் வரம் பெற்றிருந்தார். ஒருமுறை தாம் உடல் நலம் குன்றியபோது நற்கருணை பெற விரும்பினார். ஆனால், அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் பிரிந்த சபையைச் சேர்ந்தவராயிருந்ததால், கத்தோலிக்க குருவை தம் இல்லத்தில் அனுமதிக்க மறுத்து விட்டார். எனவே, ஸ்தனிஸ்லாஸ் நற்கருணை பெற முடியவில்லை. அதனால், மனம் உடைந்த ஸ்தனிஸ்லாஸ் புனித பார்பராவிடம் மன்றாடினார். புனித பார்பரா அவருக்குக் காட்சியில் தோன்றினார். இரண்டு வானதூதர்களைக் கொண்டு அவர் தமக்கு நற்கருணை வழங்கியதாகப் பின்னாளில் பகிர்ந்துகொண்டார் ஸ்தனிஸ்லாஸ்.

அவரைப் பற்றி வரையப்பட்ட இரண்டு படங்கள் புகழ்பெற்றவை. ஒன்றில் வானதூதர்களிடமிருந்து நற்கருணை பெறுகிறார் கோஸ்கா. இன்னொன்றில் அன்னை மரியாவிடமிருந்து குழந்தை இயேசுவைப் பெற்றுக்கொள்கிறார். உடல் நலமற்றிருந்த வேறோர் சமயத்தில் அன்னை மரியாவிடம் மன்றாடியபோது, அன்னை மரியா அவருக்குக் காட்சியில் தோன்றி, குழந்தை இயேசுவை ஸ்தனிஸ்லாசின் கரங்களில் கொடுத்தார். குழந்தை இயேசுவைக் கைகளில் ஏந்தியவுடன் தாம் நலமடைந்ததாக உணர்ந்தார் ஸ்தனிஸ்லாஸ். அத்துடன், அன்னை மரியாவே தம்மை இயேசு சபையில் சேரச் சொன்னதாகவும் பகிர்ந்துகொண்டார் ஸ்தனிஸ்லாஸ்.

தமது அழைத்தலை உணர்ந்து, இயேசு சபைத் துறவியரிடம் சொன்னபோது, அவர்கள் செல்வந்தரான அவரது தந்தைக்கு அஞ்சினார்கள். எனவே, ஜெர்மனியில் ஆக்ஸ்பர்க் நகரில் வசித்த இயேசு சபை மாநிலத் தலைவரான (புனித) பீட்டர் கனிசியசிடம் அனுப்பத் தீர்மானித்தார்கள். நானூறு மைல் தொலைவிலிருந்த அந்நகருக்கு அக்காலத்தில் நடந்தே சென்றார் ஸ்தனிஸ்லாஸ். தனது 17ஆவது பிறந்தநாள் அன்று இயேசு சபையில் சேர்ந்து நவதுறவியானார்.

பீட்டர் கனிசியஸ் அவரை ஆறு மாத காலம் ஒரு விடுதியில் தங்க வைத்தபின், நவ துறவியாக ஏற்றுக்கொண்டு, அவரை உரோமைக்கு அனுப்பி வைத்தார். “அவரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறேன்” என்று எழுதினாராம் பீட்டர் கனிசியஸ்.

மீண்டும் உரோமைக்கும் 350 மைல்கள் நடந்தே சென்றார் ஸ்தனிஸ்லாஸ். அங்கே இன்னொரு இயேசு சபைப் புனிதர் பிரான்சிஸ் போர்ஜியா அவரை வரவேற்று ஏற்றுக் கொண்டார். அவரது நீண்ட பயணம் அவரை பலவீனப்படுத்தியது. பத்து மாதங்கள் மட்டுமே உரோமையில் நவதுறவியாக வாழ்ந்த ஸ்தனிஸ்லாஸ் தீவிர காய்ச்சலின் காரணமாக உயிர் நீத்தார். அவர் இறந்தபோது அவரது வயது 17 மட்டுமே.

நவதுறவு வாழ்வில் தனது அனுபவங்களை எல்லாம் குறிப்புகளாக எழுதிவைத்தார் இந்த இளம் நவதுறவி. “இயேசுவுக்காக நான் என்ன சாதித்திருக்கிறேன்? இனி என்ன செய்யப் போகிறேன்?” என்றெல்லாம் மறைப்பணி ஆர்வத்துடன் அக்குறிப்புகளில் எழுதியுள்ளார் ஸ்தனிஸ்லாஸ்.

நற்கருணை பக்தி, மரியன்னை பக்தி இரண்டையும் இரு கண்களாகக் கருதினார் இந்த இளம் புனிதர். தமது இறப்பு நெருங்கி வருவதை உணர்ந்த ஸ்தனிஸ்லாஸ் ஆகஸ்ட் 10 அன்று அன்னை மரியாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஆகஸ்ட் 15ல் வரவிருக்கும் விண்ணேற்புப் பெருவிழாவின்போது விண்ணகத்தில் தூதர்களுடன் அவ்விழாவைக் கொண்டாடத் தம்மை அழைத்துக் கொள்ளுமாறு கெஞ்சி எழுதியிருந்தார். அவர் விரும்பியவாறே ஆகஸ்ட் 15 அதிகாலை 04.00 மணிக்கு செபித்துக்கொண்டே இறைபதம் சேர்ந்தார். இறப்பதற்கு சற்று முன்னர் அன்னை மரியாவை வானதூதர் புடைசூழக் கண்டதாக அருகிருந்த அருள்பணியாளரிடம் தெரிவித்தார்.

உரோமை மக்கள் பலரும் அவர் இறந்ததைக் கேள்விப்பட்டு, துறவற இல்லத்துக்கு வந்தனர். அவரைப் புனிதர் எனக் கொண்டாடிய மக்கள், அவருடைய திருப்பொருள்கள் ஏதேனும் ஒன்றை எடுத்துச் சென்றனர். 1605ஆம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டபோது, அவரது அண்ணன் பவுலும் அந்நிகழ்வில் கலந்துகொள்ளும் பேறு பெற்றார்.

இன்று பல துறவற சபைகளிலும் நவதுறவியரின் பாதுகாவலராகக் கருதப்படுகிறார் புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா. மாணவர்களின் பாதுகாவலராகவும் வணங்கப்படுகிறார். போலந்து நாட்டின் பாதுகாவலரும் இவரே. “மேலானவற்றுக்காகவே நான் பிறந்தேன்” என்பது புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின் புகழ்பெற்ற ஒரு வரி. 2018ஆம் ஆண்டு அவரது இறப்பின் 450ஆவது ஆண்டு விழாவின்போது திருத்தந்தை பிரான்சிஸ் இந்த வரியை மேற்கோள் காட்டினார்.

குழந்தை இயேசுவைக் கையில் தாங்கும் பேறு புனித அந்தோனியார், புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கோ போன்ற ஒரு சிலருக்கே கிடைத்துள்ளது. அன்னை மரியாமீது அளவற்ற அன்பு கொண்டவர்களுக்கு அந்தத் தாய் அளிக்கும் கொடை இது.

புனித குழந்தை தெரசாவுக்குப் புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின்மீது சிறப்பு பக்தி இருந்தது. அவரைப் போலவே தாமும் இளம் வயதில் இறக்கப் போவதாக நம்பிய தெரசா, இறைவனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற பேராவலை வலிமைப்படுத்திக் கொண்டார்.

பதினேழு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த இந்த இளம் புனிதர் நம் அனைவருக்கும் மாதிரியாகத் திகழ்கிறார். நவம்பர் 13ஆம் நாள் இவரது விழா கொண்டாடப் படுகிறது.



அருள்பணி. குமார்ராஜா

பனிமய அன்னை 16

# அன்னையின் புதிய ஆலயம்

**புதிய ஆலயத்தின் முதற்பணி**

பனிமய அன்னையின் அற்புத திருச் சுரூபத்தின்மீது இடி விழுந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, புனித இராயப்பர் குடிசைக் கோவிலில் நிறுவப் பட்டிருந்த பனிமய அன்னைக்கு, **சுவாமி விஜிலியுஸ் மான்சி** கற்களால் ஓர் அழகுமிகு ஆலயம் கட்டியெழுப்ப விருப்பப்பட்டார்.

பனிமய அன்னைக்குப் புதிய ஆலயம் அமைந்த விபரத்தைப் பற்றி, சுவாமி விஜிலியுஸ் மான்சி உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவர் **தம்பூரிணி மிக்கேல் ஆஞ்சலா** (Tamburini Michael Angelo) என்பவருக்கு 1714 ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாளன்று எழுதிய இத்தாலிய மடலில் விளக்கமாக குறிப்பிட்டுள்ளார்.

அன்னைக்கு அழகியதோர் ஆலயம் எழுப்பும் முயற்சியில் முதல் காரியமாக, அன்னையின் திருச்சுரூபத்தை



நிறுவுவதற்கென அழகுமிக்க ஒரு சுரூப மாடத்தை கோவாவில் இருந்து சுவாமி மான்சி தருவித்தார்.

கொழும்பிலிருந்து முத்துக்குளித்துறையில் உள்ள வர்த்தகச் சாவடிகளை பார்வையிட வந்த டச்சு ஆளுநரிடம் தூத்துக்குடி கத்தோலிக்க சமுதாயத் தலைவர்கள் அன்னைக்கு ஆலயம் எழுப்ப அனுமதி வேண்டியபோது, டச்சு ஆளுநர் மறுத்து விட்டார்.

கற்களால் ஆலயம் கட்டுவதற்கு விதிக்கப் பட்டிருந்த தடையை நீக்குவதற்கு பரவ குல சாதித் தலைவர் **தொன் எஸ்தோவரின் தெக்குரூஸ் பூ பாலராயர்** (1680-1686) எடுத்துக் கொண்ட முயற்சியைத் தொடர்ந்து, அவரது பேரனான **தொன் சூசை லூயிஸ் தெக்குரூஸ் கோமஸ்** (1700-1716) மான்சி சுவாமிகளின் ஆசிபெற்று இலங்கைக்குச் சென்றார்.

முத்துக்குளித்துறையின் பரவ குல சாதித் தலைவர் கொழும்பிற்கு நேரில் சென்று டச்சு ஆளுநரிடம் அனுமதி கேட்டபோது, அன்னை அருளால் அனுமதி உடனே கிடைத்தது.

**ஆலயத்திற்கு அடிக்கல்**

1712ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாளன்று மாலை வேளையில், கொச்சி ஆயர் **பேதுரு பச்சேக்கு** (Peter Pacheco) என்பவரின் அனுமதியுடன் அன்னையின் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அடித்தளத்தின் முதல் மூலைக்கல்லின் ஒரு பக்கத்தில் **MATRI TER ADMIRABILI** (மும் முறை அதிசய அன்னைக்கு) என்றும், மறுபக்கத்தில் **MAGNIFICAT** (மாக்னிபிக்காத்) என்றும் இரு இலத்தீன் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

1713ஆம் ஆண்டு ஆலயம் நிறைவு பெற்றது.

**ஆலயத்தில் முதற் திருவிழா**

1713ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் நாளன்று இயேசு சபை மாநிலத் தலைவர் **எம்மானுவேல் பெரைரா** (Emmanuel Pereyra) அவர்கள் ஏழு குருக்களுடன் சேர்ந்து, பனிமய அன்னையின் திருநாளை புதிய ஆலயத்தில் வெகு ஆடம்பரமாகக் கொண்டாடினார்கள்.

புதிய ஆலயத்தின் பீடப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த அன்னையின் சிலைமாடத்திற்கு இருபக்கத்திலும் புனித இஞ்ஞாசியார், புனித சவேரியார் ஆகிய இருவருக்கும் தனித்தனி பீடங்கள் அழகுற அமைக்கப்பட்டிருந்தன. தூத்துக்குடி நகரின் பாதுகாவலர்களான இந்த இரு புனிதர்களின் திருநாட்களை, தூத்துக்குடி மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர்.

**தூத்துக்குடியின் பங்குக் கோவில்**

ஆலயத்தின் கட்டிட வேலை முழுவதும் 1714ஆம் ஆண்டில் முற்றுப்பெற்று, திருவழிபாடுகள் அனைத்தும் முறையே நடைபெற்று வந்ததால், இந்தப் புதிய பனிமய அன்னை ஆலயம் தூத்துக்குடி மக்களுக்கெல்லாம் **பங்குக் கோவிலாக** மாறியது.

1538ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடியின் பங்குக் கோவிலாக விளங்கிய புனித இராயப்பர் ஆலயம், 1714ஆம் ஆண்டு வரை தான் பங்குக் கோவிலாக விளங்கியது.

1733ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கையை, **சுவாமி ஜான்அந்தனுஸ்** (Joan Anthunus) இயேசு சபைத் தலைவர் **பிரான்சிஸ்கோ ரெட்ஸ்** (Francisco Retz) என்பவருக்கு எழுதும்போது, அன்னையின் ஆலயத்தை ஒரு பேராலயம் (Basilica) எனச் சிறப்புப் பெயர் சூட்டி குறிப்பிட்டுள்ளார்.

**ஆலய நிர்வாகம்**

1773ஆம் ஆண்டில் **பாப்பரசர் 14ஆம் கிளமென்ட்** (Pope Clement XIV, 1769-1774) உலகமெங்கும் இயேசு சபையைக் கலைத்தார். அதன் விளைவாக, முத்துக்குளித்துறையில் பணியாற்றி வந்த இயேசு சபைக் குருக்கள் ஆலயங்களை விட்டு வெளியேறினர்.

இயேசு சபைக் குருக்களுக்குப் பதிலாக கோவா, மயிலாப்பூர், கிரங்கனூர் ஆகிய பதுரவாதோ மறை மாநிலங்களின் ஆயர்கள், முத்துக்குளித்துறைக்கு சுதேசக் குருக்களை அனுப்பி வைத்தனர். இந்த சுதேசக் குருக்களுக்கு பங்கு நிர்வாகத்தில் போதிய அனுபவம் இல்லாததால், ஒவ்வொரு கடற்கரை ஊரிலும் அங்குள்ள பட்டங்கட்டிகளே ஆலய நிர்வாகம் செய்ய தொடங்கினர்.

தூத்துக்குடி பனிமய அன்னையின் ஆலய நிர்வாகமும் பரவ குல சாதித் தலைவரின் பொறுப்பினில் வந்தது. அவரே, கோவாவை சேர்ந்த குருக்களையோ அல்லது கத்தனார்கள் எனப்படும் சிரியன் ரீதியைச் சேர்ந்த குருக்களையோ, பனிமய அன்னை ஆலயப் பங்கு குருக்களாக நியமித்தார்.

1814ஆம் ஆண்டில் **பாப்பரசர் 7ஆம் பத்திநாதர்** (Pope Pius VII, 1800-1823) தடை செய்யப்பட்டிருந்த இயேசு சபையை மீண்டும் புதுப்பித்தார்.

1836 ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் நாளன்று **பாப்பரசர் 16ஆம் கிரகோரியார்** (Pope Gregory XVII, 1831-1846), பாண்டிச்சேரி மறை மாநிலத்திலிருந்து முத்துக்குளித்துறையை உள்ளடக்கிய மதுரை மிஷனைப் பிரித்து தனி அப்போஸ்தலிக்க மறை மாநிலமென்ற **மதுரை விக்காரியேற்**றை (Madurai Vicariate) உருவாக்கினார்.

பாப்பரசர், இந்தப் புதிய மதுரை மிஷனை, பிரான்ஸ் நாட்டின் **துளுஸ்** (Toulouse) மாநிலத்தைச் சேர்ந்த இயேசு சபைக் குருக்களின் பொறுப்பில் ஒப்படைத்தார்.

**சுவாமி ஜோசப் பெர்த்ராண்ட்** (Joseph Bertrand) தலைமையின் கீழ் இருந்த இந்த மதுரை மிஷன் நாளடைவில் **பிரெஞ்சு மிஷன்** என்று அழைக்கப்பட்டது.

போர்த்துக்கீசிய அரசின் பதுரவாதோ ஞான அதிகாரத்தின் கீழ் இருந்த ஆலயங்கள், பங்குகள் அனைத்துமே **கோவா மிஷன்** என்றே அழைக்கப் பட்டன.

*- (தொடரும்)*



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

9

# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)



தூய பனிமய அன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த சிறுவர்கள், 5 முதல் 8ஆம் வகுப்புகளில் படிக்க தூய சவேரியார் பள்ளியில் சேர்வதற்கு அந்த நாட்களில் இருந்த இடர்பாடுகளையும், P.M. ஓர்னலாஸ் பள்ளியில் எட்டாம் வகுப்பில் வெற்றி பெற்று மேற்கொண்டு படிக்க தூய சவேரியார் பள்ளியில் சேர்ந்தால் ஒன்பதாம் வகுப்பில் ஓராண்டுக்குமேல் படிக்க வேண்டிய நிலையையும் அருள்தந்தை S.M. தல்மெய்தா அடிகளார் நன்கு அறிந்திருந்தார்கள்.

வேம்பாரை பூர்வீகமாகக் கொண்டிருந்த அவர் தன் ஊர்க்காரர்கள் பலர் இலங்கையில் வணிகர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்ததைப் பயன்படுத்தி இலங்கையில் பள்ளிக்கூடங்களைத் திறம்பட நடத்திக் கொண்டிருந்த த லசால் சகோதரர்களிடம் அணுகி தன் பங்கில் இயங்கி வந்த P.M. ஓர்னலாஸ் நடுநிலைப் பள்ளியை ஒப்படைத்து மேல்நிலைப் பள்ளிக்கூடமாக ஆக்க வேண்டும் என கேட்டு, அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்தார்கள்.

அவரது விடாமுயற்சியின் பலனாக உலகின் பல நாடுகளில் கல்விப் பணியாற்றி வந்த த லசால் சகோதரர்கள், அப்போது இலங்கையிலிருந்த Bro. Austin (ஆங்கிலேயர்) Bro. Lawrence (பர்மாகாரர்) Bro. Cassian (மலேசியர்) Bro. Jesudas (நாகர்கோயில்) Bro. Xavier Corera (தூத்துக்குடியைச் சேர்ந்தவர்) கூடவே ஓரிரு சகோதரர்கள் தூத்துக்குடிக்கு வந்து P.M. ஓர்னலாஸ் நடுநிலைப் பள்ளியை நடத்த ஏற்றெடுத்தார்கள்.


குருக்கள் இல்லத்தையும் பள்ளிக் கூடத்தையும் அருட்சகோதரர்களிடம் ஒப்படைத்துவிட்டு அன்னையின் ஆலய வளாகத்தில் சவேரியார் சிற்றாலயத்திற்கு அடுத்திருந்த ஒரு பெரிய வீட்டிற்கு சில மாறுதல்களைச் செய்து பங்கு அலுவலகத்தையும் குருக்கள் இல்லத்தையும் மாற்றினார்கள். அந்த தற்காலிக ஏற்பாட்டிற்கு பிறகு ஜார்ஜ் ரோடுக்கும் பேதுரு ரோடுக்கும் இடையிலிருந்த பழைய மையவாடியையும் பழைய பேதுரு ஆலயம் மற்றும் Hall Sixயையும் அருட்சகோதரர்களிடம் ஒப்படைத்தார்கள்.

ஸ்பெய்ன் (Spain) நாட்டைச் சேர்ந்த கட்டிடக்கலை நிபுணர் Bro. Emilianus Dias வடிவமைத்துக் கொடுத்த வரைபடத்திற்கு ஏற்ப அவரது மேற்பார்வையில் De La Salle மேல்நிலைப்பள்ளி கட்டி எழுப்பப்பட்டது. அதைக் கட்டுவதற்கு வேண்டிய பணத்தை அருள்தந்தை தல்மெய்தா அவர்கள் பல வணிகர்களிடம் சென்று ஒரு வகுப்பறைக்கு ரூபாய் பத்தாயிரம் என நன்கொடையாக வசூலித்துக் கொடுத்தார்கள்.

நல்ல உள்கட்டமைப்புகளோடும் அருட் சகோதரர்கள் தங்குமிடமும் என பல அம்சங்களோடு அமைந்த த லசால் மேல்நிலைப்பள்ளிக்கூடம் இன்று தூத்துக்குடியில் இயங்கும் கல்வி நிலையங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

மனம் கவர்ந்த காட்சிகளை மீண்டும் காணத் துடிப்பது மனித இயல்பு. அன்று கண்ட அன்னையின் அலங்காரத் தேர் பவனியை என்று காண்போம் இனி என ஏக்கத்தில் இருந்தோருக்கு கைகொடுத்ததுபோல் சில பழைய நிகழ்வுகளின் காலநிறைவு விழாக்களின் நினைவு பொறி தட்டின.

தூத்துக்குடியில் 1864ஆம் ஆண்டு இரு வேறு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஒன்று திருஇருதயங்களின் ஆலயம் இயேசு சபை குருக்களால் கட்டி முடிக்கப்பட்டது. அதுபோல் தூத்துக்குடிக்கென ஒரு நகர மன்றம் நிறுவப்பட்டது. எனவே அவ்விரு நிகழ்வுகளின் நூற்றாண்டு விழா 1964ஆம் ஆண்டு கொண்டாடப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.



MOST.REV.DR.THOMAS FERNANDO

அவை அல்லாமல் தூத்துக்குடி மறைமாவட்ட இரண்டாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப் பட்டிருந்த மேதகு தாமஸ் பர்னாந்து ஆண்டகை வத்திக்கான் நகரில் குருவாக அருட்பொழிவு பெற்று 25 ஆண்டுகள் நிறைவானதால் அதை வெள்ளி விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும். விடுவார்களா? மூன்று நிகழ்வுகள் அல்லவா?

எழுந்தது கோரிக்கை! 1964ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5ஆம் நாள் பரிசுத்த பனிமய அன்னையின் திருவிழா தேர்த்திருவிழாவாகக் கொண்டாடப்பட வேண்டும் என்ற வேண்டுகோள்!! பல நிலைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஆயரும் அனுமதி நல்கினார்.

மின் இணைப்புகளும் ஒலிபெருக்கிகளும் தூத்துக்குடியில் நடைமுறைக்கு வந்திராத பத்தொன்பதாவது நூற்றாண்டு பழக்க வழக்கங்களின் எச்சங்களாக நடைமுறையில் இருந்த சில பாரம்பரியங்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கிய காலம் அது.

சுதேச மதக்காரர்களின் மார்கழி பஜனைபோல் அன்னையின் விழாக் காலங்களில் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் மக்களை துயிலெழுப்பி முதல் திருப்பலிக்கு ஆற்றுப் படுத்த சங்கீத சபாக்கள் என்ற பெயரில் சில பஜனை கோஷ்டிகள் தெருத்தெருவாக பாடிச் செல்வது வழக்கம். அவற்றுள் போட்டிகளும் கோஷ்டி மோதல்களும் ஏற்படுவதுண்டு.

அந்த ஆண்டு கொடியேற்றத்திற்கு முன்பு இரண்டு சபாக்களுக்கிடையில் நடந்த மோதல் கல்லெறிதலில் தொடங்கவே அருள்தந்தை தல்மெய்தாவின் தலையைக் கண்டவுடன் அது எவ்வாறு அடங்கிற்று என்பதே தந்தைபால் மக்கட்கு இருந்த நன்மதிப்பும் பாசமும் எத்துணை என்பதைப் பறைசாற்றும்.

அன்னையின் 1964ஆம் ஆண்டு திருவிழாவின்போது மராட்டிய மாநிலம் மும்பை மாநகரை அடுத்த வாஸீ என்ற இடத்திலிருந்து 20 அல்லது 30 கத்தோலிக்கக் குடும்பங்கள் கொடியேற்ற நாள் முதல் தேர்த் திருவிழா நாள் வரை 11 நாட்களும் சிலுவைக் கோயில் மண்டபத்தில் தங்கியிருந்து விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்.

– (தொடரும்)



செல்வராஜ் மிராந்தா

# 'பனிமயம்' 29 2007 – மீள் பார்வை

**'பசிலிக்கா' வெள்ளி ஜூபிலி**

2007 புதிய ஆண்டு பிறக்கின்றது. நமது பனிமய அன்னை பேராலயத்திற்கு மற்றும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டு. நமது அன்னையின் திருத்தலம் **"சிறப்புப் பேராலயமாக"** (BASILICA) உயர்த்தப்பட்டு நேர்ந்தளிக்கப்பட்டு, 25ஆம் ஆண்டு நிறைவு பெறுகிறது. மேலும் நமது பங்கு ஆலயத்தின் 425ஆம் ஆண்டு நிறைவு பெறும் சிறப்பினையும் பெறுகிறது.

பாசத்துக்கும் மிக்க வணக்கத்துக்கும் உரிய **திருத்தந்தை இரண்டாம் ஜான்பவுல்** அவர்களால் நமது மரியன்னையின் திருத்தலம் பேராலயமாக உயர்த்தப்பட்டது. நம் முன்னாள் ஆயர் **மேதகு S.T. அமல்நாதர்**; நம் முன்னாள் பங்குத் தந்தை **பேரருட்திரு. லாம்பர்ட் மிராண்டா** இவர்களின் முயற்சியாலும், இறைவனின் இரக்கத்தாலும், "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" (ஆதி 24:50) – **பணி. A.K. ஜெரோஸின்.**

**கத்தோலிக்க இலக்கியத் திங்கள்!**

1950–க்குப் பிறகு தமிழகக் கத்தோலிக்கர்களிடையே புதிதாக ஒரு சொற்றொடர் பழக்கத்திற்கு வந்தது....

அதுதான், 'கத்தோலிக்க இலக்கியத் திங்கள்'!

தமிழகத்திலும், ஈழத்திலும் பிப்ருவரி மாதம், இலக்கிய மாதமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு வித்திட்டவர் யார்? – என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

பிப்ருவரித் திங்களை, இலக்கிய மாதமாக முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை, **தவத்திரு தனிநாயக அடிகளாரை**யே சாரும்.

தனிநாயக அடிகளார், தூத்துக்குடியில் குருத்துவப் பணியாற்றியபோதுதான், பிப்ருவரி மாதத்தை, இலக்கியத் திங்களெனப் பெயரிட்டார்.

இலக்கியத் திங்களில் நமது சிந்தனைக்குரிய கேள்வி –

ஒவ்வொரு கத்தோலிக்கக் குடும்பத்திலும், எத்தனை கிறிஸ்தவப் பத்திரிகைகளை வாங்கி, நமது அச்சு அப்போஸ்தலப் பணிக்கு ஆதரவளிக்கிறோம்?

கிறிஸ்தவ வார – மாத இதழ்களை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டியது நமது கடமை.

இலக்கியத் திங்களில், கத்தோலிக்க எழுத்தாளர்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுவோம்; அவர்களின் இலக்கியப் பணி தொடரட்டும் – வளரட்டும். – **பொறுப்பாசிரியர் கலாபன் வாஸ்.**

**'பசிலிக்கா'**

பனிமயத் தாயின் பேராலய வெள்ளி விழாவைக் கொண்டாடும் இக்காலக்கட்டத்தில் 'பசிலிக்கா–பேராலயம்' பற்றிய சில சிந்தனைகள் :

**பேராலயத்தின் கடமைகள் :**

★ திருச்சபையின் சத்தியங்கள், அறநெறிக் கோட்பாடுகள், தொடர்ந்து போதிக்கப்பட வேண்டும்.

★ திருத்தந்தையரின் சுற்று மடல்களைப் பரப்ப ஆவன செய்ய வேண்டும்.

★ திருத்தந்தையின் அபிஷேக, நாம விழாவைச் சிறப்பித்தல்.

★ பேராலய முகப்பில், பாப்பிறையின் முத்திரை கொண்டிருக்க வேண்டும்.

★ அனைத்து மக்களுக்கும் ஜெபிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**உரிமைகள் :**

★ முக்கியமான திருநாள்களில், பரிபூரண பலனை அடையலாம்.

★ பாப்பரசரின் முத்திரையை, கொடிகள், நாற்காலிகள் மற்றும் ஆலய உபகரணங்களில் பயன்படுத்தலாம்.

★ அனைத்து மக்களுக்காகவும் இங்கு வேண்டுதல் நிறைவேற்றப்பட வேண்டும்.

– **பணி. A.K. ஜெரோஸின்.**

**நாமே புதிய எருசலேம்**

அன்னை மரியா சீயோன் மகள் என்றால், நாமும் சீயோனின் பிள்ளைகள்தானே! அவர்தானே நம் மாதிரி, நம் முன்னோடி! அவரைப் போலவே நாமும் இறை வார்த்தையின்படி வாழ்ந்தால், நாமும் புதிய எருசலேமாக மாறுவோம்.

"புதிய எருசலேம் என்னும் திருநகர், கடவுளிடமிருந்து விண்ணகத்தைவிட்டு இறங்கி வரக் கண்டேன். தன் மணமகனுக்காகத் தன்னையே அணிசெய்து கொண்ட மணமகளைப்போல், அது ஆயத்தமாய் இருந்தது" (திவெ 21:2) என்னும் திருவெளிப்பாட்டிற்கேற்ப நாமும் ஆயத்தமாய் இருப்போமாக! – **அருள்வேந்தன்.**

**பொதுநிலையினர் ஆண்டு**

★ கிறிஸ்தவ அழைப்பிலிருந்தே பொதுநிலையினர் திருத்தூதுப் பணி அரும்புகிறது.

★ பொதுநிலையினர், உலகியல் அமைப்பை புதுப்பிப்பதைத் தமக்கே உரித்தான கடமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நற்செய்தி ஒளியிலே, திருச்சபைச் சட்டப்படி, கிறிஸ்தவ அன்பால் உந்தப்பட்டு, அவ்வமைப்பில் அவர்கள் நேரடியாக, உறுதியாகச் செயலாற்ற வேண்டும்.

★ எங்கும் எதிலும் இறையாட்சியைச் சார்ந்த நீதியை இவர்கள் தேட வேண்டும்.

★ திருத்தூதுப் பணிச் செயல் அனைத்துமே, அன்பிலிருந்து சுரந்து வலுப்பெற வேண்டும். – **இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளிலிருந்து.**

**அன்னையின் அணிகலன்கள்**

மாதா பக்தியில் சிறந்து விளங்குகின்ற கத்தோலிக்க மக்கள், திருச்சபையின் மடியில் இளமையிலேயே கற்று, செய்து வரும் ஒரு செப முயற்சி திருச்செபமாலை. அதைச் சொல்லி முடிந்ததும், தொடர்ந்து மாதா பிரார்த்தனையும் சொல்லுவது, செபமாலையின் இரண்டாம் பாகம் போலாகி விட்டது.

இந்தப் பிரார்த்தனை **'லொரேற்றோ பிரார்த்தனை'** என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர் ஏன் வந்தது என்றால், இத்தாலியா நாட்டில் லொரேற்றோ என்னும் இடத்திலுள்ள மாதா திருத்தலத்தில்தான், இந்தப் பிரார்த்தனை முதலில் ஓதப்பட்டது. பின், இத்தாலியின் பிற இடங்களிலும் அது செபிக்கப்பட்டது. இறுதியில், பாப்பிறை அதை உலகம் எங்கும் கத்தோலிக்க மக்கள் பயன்படுத்திட அனுமதித்தார்.

லொரேற்றோ எனும் இடத்தில், நாசரேத்தூரிலே திருக்குடும்பம் வாழ்ந்த வீட்டை, சம்மனசுக்கள் 13ஆம் நூற்றாண்டில் கொண்டு வந்து வைத்தனர் என்று நம்பப்படுகிறது. அந்தச் சிறுவீட்டை உள்ளடக்கி பேராலயம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. – **மேதகு தாமஸ் பர்னாண்டோ ஆயர்.**

✤ "அவராக வேண்டும், இவராக வேண்டும்" என்பது நமது இலக்காக இல்லாமல், மனிதராக வேண்டும் என்பது நமது இலக்காக அமையட்டும். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" – என்ற வள்ளலாரின் மனித நேயம் நம்மில் வளர வேண்டும். மனித நேயத்தைப் பற்றி வேதநூல் நமக்குக் கூறுவது – "உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக! தீமையை வெறுத்து நன்மையையே பற்றிக் கொள்ளுங்கள். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். மகிழ்வாரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள். தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள். தீமை உங்களை வெல்ல விடாதீர்கள். நன்மையால் தீமையை வெல்லுங்கள்" (உரோ 12:9–21). "பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம் (1யோவா 3:18).

மரியாவின் மனித நேயத்தைப் பின்பற்றி நாமும் மனிதராகுவோம். – **புஷ்பம் பனிமயம்.**

**ஜூபிலி ஆண்டுத் தீர்மானங்கள்**

அன்னையின் திருஉருவம் இல்லங்களுக்கு வருகை தருதல் – பேராலயத்தைக் குறித்து அஞ்சல் தலை வெளியிட முயலுதல் – ஏழை மாணவ மாணவியர்க்கு கல்வி நிதி ஏற்படுத்துதல் – வசதியற்றோருக்கான கூட்டுத் திருமணம் ஏற்பாடு செய்தல் – நற்கருணைச் சிற்றாலயம் அமைத்தல் – திருப்பயணிகளுக்கு என இல்லம் அமைத்தல் – அன்னையின் தங்கத்தேர்ப் பவனி எடுத்தல். – **பங்குப் பணியாளர்கள், பங்குப் பேரவை.**



**கலாபன் வாஸ்**
94863 90793

நம் திருச்சபை, நமது பெருமை - 8

# சுடர்விடும் விண்மீன்கள்!

நமது திருச்சபை பற்றி நாம் பெருமிதம் அடையக்கூடிய ஒரு குழுவினர் இறைநம்பிக்கையைப் பறைசாற்றும் புனிதர்கள். இறைநம்பிக்கையின் சான்றுகளாக வாழ்ந்து, இன்றும் அரும் அடையாளங்களை நிகழ்த்தி ஒளிவீசிக்கொண்டிருக்கும் மாமனிதர்களைத்தான் புனிதர்கள் என அழைக்கிறோம்.

எத்தனை புனிதர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? மிகவும் சரியாகச் சொல்வதானால், எண்ணிலடங்காதவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் என இணைய தளம் சொல்கிறது. (சில கிறித்தவ சபைகளின் மொத்த உறுப்பினர் தொகையே இவ்வளவுதான் இருக்கும். ஆனால், அவர்கள் இத்தனை புனிதர்கள் வாழ்ந்த கத்தோலிக்கத் திருச்சபையைத் தாக்கி எழுப்பும் ஆவேசம் இருக்கிறதே, அப்பப்பா!).

முதல் நான்கு நூற்றாண்டுகளில் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி இறந்த மறைசாட்சிகள் மட்டுமே புனிதர்கள் என அழைக்கப்பட்டனர். ஆனால், அதன்பின் மறைசாட்சியத்துக்கான வாய்ப்புகள் குறைந்தன, ஆனால் இறைவாக்கின்படி வாழ்ந்து சான்று பகர்ந்த மாமனிதர்கள் மக்களாலேயே புனிதர்கள் என அழைக்கப்படவும், வணக்கம் பெறவும் தொடங்கினர். ஆண்டுகள் கடந்து செல்லச் செல்ல, புனிதர்களின் வாழ்வும், பணிகளும் பல வண்ணங்களில் மிளிரத் தொடங்கின.

புனிதர்களில்தான் எத்தனை, எத்தனை வகையினர்!

**1. மறைசாட்சியர் (Martyrs) :** புனித பேதுரு, பவுல், ஸ்தேவான், லாரன்ஸ், பெர்பெத்துவா, பெலிசித்தம்மாள், நமது நாட்டின் ஓரியூர் புகழ் அருளானந்தர், இப்போது புதிய புனிதராக அறிவிக்கப்பட விருக்கும் முதல் தமிழகப் புனிதர் தேவசகாயம் பிள்ளை.



**2. மறைசாட்சியரல்லாத புனிதர்கள் (Confessors):** தங்கள் உயிரைக் கையளிக்காமல் இறுதிவரை தூயவர்களாகச் சான்று வாழ்வு வாழ்ந்தவர்களை "விசுவாச சாட்சிகள்" என அழைக்கிறது திருச்சபை. புனித மாக்சிமுஸ், புனித அம்புரோஸ், புனித அகுஸ்தின் போன்றவர்கள் சில எடுத்துக் காட்டுகள்.




**3. மறைவல்லுநர்கள் (Doctors of the Church):** தங்களுடைய போதனையாலும், எழுத்துக்களாலும் தூய வாழ்வின் மறையுண்மைகளை வெளிப்படுத்தியவர்களை மறைவல்லுநர்கள் என அழைத்துப் பெருமைப்படுகிறது திருச்சபை. இன்று வரை திருஅவை 36 புனிதர்களுக்கு இப்பெருமையை வழங்கியுள்ளது. புனித அகுஸ்தினார். தாமஸ் அக்குவினாஸ், பொன்வாய் யோவான், அவிலா தெரசாள், புனித எஃப்ரேம், புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆகியோர் இக்குழுவினரைச் சார்ந்தவர்கள்.



**4. தவ வாழ்வு வாழ்ந்தோர் (Hermits):** புனித வனத்து அந்தோனியார், புனித வனத்து சின்னப்பர், புனித ஜெரோம், புனித கைல்ஸ், புனித ஏமியன்ஸ் அவுரியா,





**5. அறப் பணிகள் செய்தோர்:** இயேசுவின் வார்த்தையை இதயத்தில் ஏற்று, சின்னஞ் சிறு சகோதர, சகோதரிகளுக்குப் பணிவிடை செய்து புனிதரானவர்கள். புனித தமியான், வின்சென்ட் தே பவுல், அன்னை தெரசா.

**6. நற்செய்தி அறிவிப்பாளர்கள்:** புனித சவேரியார், குழந்தை தெரசாள், புனித மரி ஆன் கோப், புனித பெத்ரோ சாஞ்ஜோஸ் ஆகியோர் எடுத்துக்காட்டுகள்.



**7. ஐந்து காய வரம்பெற்ற புனிதர்கள் (Stigmatists):** இவர்கள் இயேசுவின் பாடுகளை நேரடியாகத் தங்கள் வாழ்வில் தாங்கியவர்கள். இவர்கள் தங்கள் கைகளிலும், கால்களிலும், விலாவிலும் இயேசுவின் சிலுவைப் பாடுகளைப் பெற்று, பெரும் வேதனையை அனுபவித்து, அதன் வழியாக மீட்புத் திட்டத்தில் பங்கேற்றனர். "கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவுசெய்கிறேன்" (கொலோ 1:25) என்னும் பவுலடியாரின் வாக்கு இவர்களுக்கு அப்படியே பொருந்துகிறது.

இத்தகைய ஐந்துகாய வரம் பெற்றவர்கள் மொத்தம் 62 பேர். அவர்களில் அதிகம் அறியப்பட்டவர்கள் புனித பிரான்சிஸ்கு அசிசியார், புனித சீயன்னா கத்தரீன், புனித லிட்வின், புனித ரீட்டா, அருளாளர் மார்கரட் மேரி மற்றும் நமது காலத்தைய புனித பாத்ரே பியோ



**8. உடல் அழியாத புனிதர்கள்:** இறைவன் தந்த சிறப்பு வரத்தால் தங்கள் உடல் அழியாத பெருமையைப் பல புனிதர்களும் பெற்றுள்ளனர். அத்தகையோருள் மிகவும் அறிமுகமானவர்கள் லூர்து நகரில் அன்னையின் காட்சி பெற்ற புனித பெர்னதத், புனித ஜான் மரிய வியான்னி, புனித வின்செண்ட் தே பவுல், புனித ஜான் போஸ்கோ ஆகியோர். வத்திக்கான் சங்கத்தைத் தொடங்கி வைத்து 1963ஆம் ஆண்டில் இறைபதம் சேர்ந்த புனித திருத்தந்தை 23ஆம் அருளப்பரின் உடலும் இன்னும் அழியாமல் இருக்கிறது.



**9. இளம் புனிதர்கள்:** மத்தேயு நற்செய்தியில் வரும் மாசில்லாக் குழந்தைகள் இரண்டு வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களைப் புனிதர்கள் என்று அழைத்து, டிசம்பர் 28 அன்று விழாக் கொண்டாடுகிறோம்.



*அடுத்த இதழில் தொடரும்...*

"க்றிஸ் மிலியன்"

## விவிலியப் போட்டி 85

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

### கொலோசையர் திருமடல்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. தொடர்ந்து __________ வேண்டுங்கள்.
2. மகிழ்ச்சிக்கு தந்தையாம் கடவுளுக்கு __________ செலுத்துங்கள்.
3. மேலுலகு __________ பற்றியே எண்ணுங்கள்.
4. விண்ணகத்தில் __________ ஒருவர் உள்ளார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
5. ஆண்டவருக்கு __________ செய்து அவருக்கு ஏற்புடையவராக நடந்து கொள்ளுங்கள்.
6. ஒருவரை ஒருவர் __________ கொள்ளுங்கள்.
7. உங்கள் பேச்சு எப்பொழுதும் __________ __________ இருப்பதாக.
8. நீங்கள் கற்றுக் கொண்ட விசுவாசத்தில் __________ நில்லுங்கள்.

**பிப்ரவரி 11 : உலக நோயாளிகள் தினம். விடைகளைக் கோர்த்தால், நலமோடு வாழ வழிகள் பிறக்கும்.**

## விவிலியப் போட்டி 84

**சனவரி 2022 விடைக்குறிப்புகள்**

### யாக்கோபு திருமடல்

| | | |
|---|---|---|
| 1. | அன்பு | யாக்கோபு 2:8 |
| 2. | அமைதி | யாக்கோபு 3:18 |
| 3. | பொறுமை | யாக்கோபு 5:7 |
| 4. | மகிழ்ச்சி | யாக்கோபு 1:10 |
| 5. | கருணை | யாக்கோபு 4:6 |
| 6. | இரக்கம் | யாக்கோபு 2:13 |
| 7. | நம்பிக்கை | யாக்கோபு 2:23 |
| 8. | தூய்மை | யாக்கோபு 3:17 |

*புத்தாண்டின் நற்பண்புகள் :*

**"அன்பு, அமைதி, பொறுமை, மகிழ்ச்சி, கருணை, இரக்கம், நம்பிக்கை, தூய்மை"**



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 153**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 129**

## உங்கள் கவனத்துக்கு

**பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் : 88709 26751.**

**அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.02.2022**





**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 129**

### I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 79

**விடை எழுதிய அன்பியங்கள் : 25**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. இராயப்பர் அன்பியம் **ஷைனி**
1. சவேரியார் அன்பியம் **ஆரோக்கியராஜ் ஹெலினா**
2. செபஸ்தியார் அன்பியம் **ஜெசிலா சேவியர்**
3. சிந்தாத்திரை அன்பியம் **நேசம்**

### பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து பாராட்டுக்குரியவர்கள் : 75

4. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. ஜெயா
7. பிருந்தா சார்லஸ்
8. சோஃபியா
9. லூக்காஸ் சகாயம்
10. சான்டினோ

**அன்னை தெரசா**
11. ரெய்சா சுஜய்
12. சுகன் மோனிஷா
13. ஜூலியஸ் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**
14. டென்சி
15. மெடோனா ஜோசப்
16. ஆரோன் ஷாரோன்

**கிறிஸ்தரசர்**
17. ஜூலியட் சாவியோ
18. ஸெலஸ்கி கிளமெண்ட்
19. ரெக்ஸ் க்ரீன்வெல்
20. லூரட் வசந்த்
21. ராஜா ஐரின்
22. எஃப்ரின் ஜூலியா

**தஸ்நேவிஸ் மாதா**
23. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
24. சகாயராணி தனராஜ்
25. பிரின்சி சே.

**பாத்திமா மாதா**
26. ஜெசிந்தா கான்ஸ்டன்
27. ஆன்ட்ரியா டாரல்

**இரக்கத்தின் மாதா**
28. பிரைட்டன் ஜெரோபின்
29. நம்பிக்கை கொன்சால்

**ஜெபமாலை மாதா**
30. ப்ரிஜிட்
31. ப்ளெசிலா இருதயராஜ்
32. கல்யாணிசெல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
33. டிரைபேனா
34. சகாய சியாஸ்டோ

**காவல் தூதர்**
35. ஆரோக்கிய டெய்சி
36. வெனிட்டாள்
37. ஜெயா அகஸ்டின்
38. ட்ரினிஷா
39. ஜோனத்தன்
40. தாமஸ் ரொமில்டா

**குழந்தை தெரசா**
41. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
42. அந்தோனியப்பா பிச்சம்மாள்
43. மோனிகா செபாஸ்டின்

**லூர்து மாதா**
44. ஆலிவர் ஜெனோரா
45. ஃபிலோ கோமஸ்
46. ஜெனோ சேவியர்
47. ரம்யா
48. ரஜூலா
49. ரெலிஷா ஜூலியஸ்
50. சான்டினா
51. ரோஸ்லின் தாமஸ்
52. மேரி அனிதா

**மணல் மாதா**
53. கெயிட்டன் ஃபர்னான்டோ
54. ரொசாரி கோமஸ்
55. ஹெபிட்டா

**மிக்கேல் அதிதூதர்**
56. இன்ஃபன்ட் ஜோஸ்னா

**பவுலடியார்**
57. லீமாரோஸ் ஜாய்
58. ராஜா ரோஸ்லின்
59. ஜான்சன் ஒஃபிலியா

**பொம்பெயி மாதா**
60. டயானா டெரிக்
61. லூடா கான்ஸ்டன்
62. ஜான்சி ராணி
63. மாத்யூ கர்டோசா
64. டயானா கோமஸ்
65. தெரசா பிரகாஷ்

**இராயப்பர்**
66. ஷைனி

**சவேரியார்**
67. டெலிலா அமலன்
68. ரூபா மனுவேல்
69. அண்டன் சகாயம்
70. பிரின்சி ஆக்னல்

**செபஸ்தியார்**
71. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
72. டிஜேபிஆர் இராயன்

**சிறுமலர் அன்பியம்**
73. ஒஃபிலியா தாமஸ்
74. விஜி சகாயராஜ்
75. செலஸ்டினா
76. எல்சிட்டா ஆனந்தன்

**சூசையப்பர்**
77. கிறிஸ் ரிஜோ
78. ரூபி கொர்னேலியுஸ்

**திருச்சிலுவை**
79. கைத்தான் ரமணி

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 50

### பரிசு பெறுபவர்கள் : 4

1. **ஆஷா தனசீலன்,** கோயம்புத்தூர்
2. **செல்வம் டெலிசியா,** லயன்ஸ் டவுண், தூத்துக்குடி
3. **அருள்சகோ. லெத்தீசியா,** உரியூர்குப்பம்
4. **ரோசாலி,** திண்டுக்கல்

### இதர பங்குகளிலிருந்து பாராட்டு பெறுபவர்கள் : 46

**ஆலந்தலை**
80. ஃபொன்சேகா

**ஆறுமுகனேரி**
81. தொம்மை அந்தோனி

**குரும்பூர்**
82. சுபா டெரன்ஸ்

**சென்னை**
83. கமலஜோதி ஜெயசீலன்
84. சகாயராணி இம்மானுவேல்

**பாளையங்கோட்டை**
85. பிரேமா குணசீலன்
86. டெனிசா வி.
87. ஸ்வர்ணா ஃபர்னான்டோ

**கயத்தாறு**
88. அமல்ராஜ்

**உரியூர்குப்பம்**
89. அருள்சகோ. லெத்தீசியா

**பெரியகுளம்**
90. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
91. ஜெர்மோன்
92. மரிய மதலேன்

**கோவை பல்லடம்**
93. பிரான்சிஸ் ஆர்லன்

**திருச்சி**
94. மோனிட்டா கிறிஸ்டி
95. ஸ்டெல்லா
96. ஜான்சிராணி
97. மாத்யூ விவேக்
98. ஆஞ்சலா

**வடக்குத்து**
99. ஹென்றி தாஸ்

<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>

**திரு இதயங்களின் பேராலயம்**
100. பெனிட்டா
101. எல்சி
102. ரிமோல்டா
103. சுசீலன்
104. ரமோலா கமிலஸ்

**குருஸ்புரம்**
105. பிளாசி செல்வராஜன்
106. ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
107. செரினா
108. சுகிர்தா

**யூதா ததேயு கோவில்**
109. ரோஸ் சேவியர்
110. கமிலஸ் மோத்தா

**காந்தி நகர்**
111. சாந்தினி
112. ரியாலினோ
113. ஃபின்டன் சோஃபியா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
114. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
115. விஜியா பர்னாந்து
116. ராணி சேகர்

**இஞ்ஞாசியார் புரம்**
117. அற்புதசெல்வி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
118. குழந்தை தெரசா எஸ்.

**அந்தோனியார் கோவில்**
119. மென்சிலா லொயோலா

**லூர்தம்மாள்புரம்**
120. ரெனிஸ்டன் ஜெர்லின்
121. வெண்ணிலா பிரிட்டோ

**திரேஸ்புரம்**
122. பிலோ சான்ட்ரியா
123. கோல்வின் சேசுராஜ்

**புனித சார்லஸ் கோவில்**
124. சகாயிட்டா மச்சாது
125. விர்ஜின் சகாயராஜ்

# பனிமய சாட்சியங்கள்



**பனிமய சாட்சியம் : 48**

### மேரி, தூத்துக்குடி.

என் பெயர் மேரி. பனிமய மாதா பேராலயம், அன்னை தெரசா அன்பியம். என் மகளுக்கு கல்லீரலில் சிறுசிறு பருக்கள் இருப்பதாக மருத்துவர் கூறினார். அதனால் கல்லீரல் சதையை எடுத்து பரிசோதனை பண்ண வேண்டும் என்று கூறினார். நான் பனிமயத் தாயிடம் மன்றாடினேன். எனது மகளுக்கு சோதனையில் எல்லாம் நன்றாக உள்ளது என்று கூறினார்கள். இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!







**பனிமய சாட்சியம் : 45**

### அமல்ராஜ், ஹெப்சிபா, மதுரை.

எங்களுக்கு சொந்த ஊர் நாலுமாவடி. தென்னிந்திய திருச்சபை கிறிஸ்தவர்கள் (CSI). நான் கத்தோலிக்க கல்வி நிறுவனங்களில் பயின்றதால், மரியன்னைமீதும், புனித அந்தோணியார்மீதும் பக்தியுள்ளவள். திருமணமாகியதும் பனிமய மாதா கோவிலுக்கு வந்தோம். எங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தால், பாஸ்டராக பணிபுரிய குழந்தையை அர்ப்பணிப்போம் என்று மாதாவிடம் வேண்டிக்கொண்டோம். பனிமயத் தாயின் பரிந்துரையால், ஹாரி எபிராஜ், ஆரன் எடிராஜ் என்னும் இரு மகன்கள் பிறந்துள்ளார்கள். பணியின் நிமித்தம் கேரளாவுக்கு சென்றுவிட்டதால், மாதாவுக்கு உடனே காணிக்கை செலுத்த முடியவில்லை. தற்பொழுது வாய்ப்பு கிடைத்ததால், பேராலயம் வந்து 1 பவுன் தங்க நாணயத்தை காணிக்கையாக தந்து, மகன்களுக்காக மன்றாடினோம். மரியே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 46**



### பபிவிவேக் அன்றனி, பவுலின் மெடோனா, ராணிப்பேட்டை.

எங்களுக்கு 2013ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. திருமணமாகி (2013) 7 ஆண்டுகள் குழந்தையின்றி தவித்தோம். பலமுறை பனிமயத் தாயின் பேராலயம் வந்து மன்றாடினோம். கடந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக பேராலயம் வரமுடியவில்லை. எங்களது நண்பர் ஒருவர் பேராலயத்திலிருந்து பாலன் இயேசு சட்டை ஒன்றை அனுப்பி செபிக்க சொன்னார்கள். நாங்கள் நம்பிக்கையோடு செபித்தோம். கடந்த 20-04-2021 அன்று பபி பியோ என்னும் மகன் பிறந்தான். எனவே, பேராலயம் வந்து மாதாவுக்கு நன்றி சொல்லி ஒரு சேலையை காணிக்கையாகத் தந்துள்ளோம். மரியே வாழ்க!.

**பனிமய சாட்சியம் : 47**

### பபிவிமல் ஆன்ட்ரூ, ஜெர்லின் ஆக்னஸ், ராணிப்பேட்டை.



பபிவிமல் ஆன்ட்ரூவுக்கு ஐந்து ஆண்டுகள் பல இடங்களிலும் திருமணவரன் தேடினோம். சரியான வரன் அமையவில்லை. பனிமயத் தாயின் பேராலயம் வந்து அன்னையிடம் மன்றாடினோம். பனிமயத் தாயின் அருளால் ஜெர்லின் ஆக்னஸ் மணமகளாக கிடைத்து 20-06-2020ல் திருமணம் நடைபெற்றது. அன்னையின் ஆசியால் தற்பொழுது ஒரு குழந்தையும் உள்ளது. மாதாவுக்கு நன்றி. பனிமய அன்னையே வாழ்க!

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 31)

**பிப்ரவரி - 2022**

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்முனைவர் குமார்ராஜா** | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி விமல்ஜேன்** | 9791529877 |
| களப் பணியாளர் | : | **சகோதரர் அசாத்** | 88709 26751 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் காலை 06.00 - 06.30*
*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *கூட்டுத் திருமணம்* : 08.05.2022
- ✓ *உறுதிப்பூசுதல் அருள்சாதனம்* : 29.05.2022
- ✓ *புதுநன்மை அருள்சாதனம்* : 31.07.2022
  *பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம் :** *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.30 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*





## பனிமயச் சுவடுகள்

**(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)**

312. பங்கின் **நலிந்த குடும்பத்தினர்களுக்குக் கிறிஸ்துமஸ் பரிசு** வழங்கும் கிறிஸ்துமஸ் விழா 22.12.2021 புதன் மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. அன்பிய வழிகாட்டிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 140 குடும்பங்களுக்குத் தலா ரூ. 500 பெறுமானமுள்ள டோக்கன்கள் பரிசாக வழங்கப்பட்டன.

313. **கிறிஸ்துமஸ் நள்ளிரவுத் திருப்பலி** 24.12.2021 வெள்ளி அன்று நடைபெற்றது, நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. 25.12.2021 சனி காலை 08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை கிறிஸ்துமஸ் திருப்பலி நிறைவேற்றி, 5 குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கினார்கள்.

314. **கிறிஸ்துமஸ் கலைநிகழ்வுகள்.** பேராலயப் பங்கின் 23ஆம் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சிகள் “ஸ்நோஸ் யூத்” இளையோரின் முன்னெடுப்பில், மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகையின் தலைமையில் 25.12.2021 சனி இரவு 07.00 மணிக்குப் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

315. **மணவிழா நாயகர்களுக்கான நன்றித் திருப்பலி.** நமது பங்கில் திருமண வெள்ளிவிழா, ரூபி விழா, பொன்விழா கண்ட 10 தம்பதியருக்கான நன்றித் திருப்பலி 27.12.2021 திங்கள் மாலை 05.30 மணிக்கு நடைபெற்றது. பங்கின் சார்பாக வாழ்த்துச் சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

316. **பனிமய அன்னைக்குப் புதிய தங்க ஆபரணங்கள்.** 01.01.2022 சனி நள்ளிரவில் நடைபெற்ற புத்தாண்டுத் திருப்பலியில் பனிமய அன்னைக்கு 2350 கிராமில் 8 புதிய தங்க ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டன.

317. **தஸ்நேவிஸ் மாதா உயர்பணிப் பயிற்சியகம்.** 01.01.2022 சனி காலை 08.00 மணிக்கு நடைபெற்ற புத்தாண்டுத் திருப்பலியின் நிறைவில் மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை தஸ்நேவிஸ் மாதா உயர்பணிப் பயிற்சியகத்தை மந்திரித்துத் திறந்து வைத்தார்கள். மேதகு ஆயர் அவர்களுக்குப் பங்கின் சார்பாக ரூ. 15, 000 ஏழை மாணவர் கல்வி நிதியாக வழங்கப்பட்டது.

318. ஆண்டின் **முதற் சனி**யாகிய **01.01.202** அன்று காலை 11.30க்கு சிறப்புப் புத்தாண்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மாலை 05.30 மணிக்குப் பேராலயத்தைச் சுற்றி சப்பரப் பவனி நடைபெற்றது. தொடர்ந்து நற்கருணை ஆசீரும், பாலன் ஆசீரும் நடைபெற்றன. அவை நேரலையாக சூர்யா தொலைக்காட்சியிலும், நமது ஸ்நோஸ் பசிலிக்கா இணையதள யூட்யூப் அலைவரிசையிலும் ஒளிபரப்பப்பட்டன.

319. ஜனவரி மாதத்திற்கான விவிலியப் பாசறை **“ஆசிகளை அதிகரியுங்கள்”** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 04.01.2022 மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. பங்கு மக்கள் 47 பேரும், ஆசிரியர் பணிப் பதிவட்டை புதுப்பித்தலுக்காக 27 பேரும் என மொத்தம் 74 பேர் கலந்துகொண்டனர்.

320. **ஊரடங்கு அறிவிப்பு.** தமிழக அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து, வெள்ளி, சனி, ஞாயிறுகளில் மக்கள் பங்கேற்பின்றித் திருப்பலிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஞாயிறு திருப்பலி காலை 08.00 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

321. மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி திரு இதயங்களின் பேராலயத்தில் **100 செவ்வாய் தொடர் திருமணி ஆராதனை** நடைபெற்று வருகிறது. பேராலயப் பங்குத் தந்தையின் அழைப்பை ஏற்று கடந்த 11.01.2022 செவ்வாய் அன்று மாலையில் நமது பேராலயத்தில் இருந்து பதாகையும், திருக்குடும்ப சபைக் கொடியும் ஏந்தி பங்குத் தந்தையரின் தலைமையில் ஏறக்குறைய 50 பேர் பவனியாகச் சென்று, ஒரு மணி நேரம் நற்கருணை ஆண்டவர் முன் ஆராதனை செய்தனர்.

322. பனிமய அன்னைக்குப் புத்தாண்டுத் திருப்பலியில் புதிய ஆபரணங்கள் சாற்றப்பட்டதைக் கண்டித்து வெளியிடப்பட்ட ஃபேஸ் புக் பதிவுக்கு எதிராகக் கடந்த 10.01.2022 திங்கள் அன்று நடைபெற்ற பங்கு மேய்ப்புப் பணி செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டது. அதன் தொடர் நடவடிக்கையாகப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் **60 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கோரிக்கை மனு** மேய்ப்புப் பணிக்குழுவின் கருக்குழு உறுப்பினர்களால் 14.01.2022 வெள்ளி அன்று மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

323. ஜனவரி மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (15)** 15.01.2022 சனி அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. "திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்காக" என்னும் கருத்துக்காக நடைபெற்ற இவ்வழிபாட்டில் 50 இளையோரின் வேண்டுதலுக்காகப் பரிந்துரைத்து மன்றாடப்பட்டது.

324. பேராலயப் பங்கின் 75ஆவது (பவளவிழா) பனிமயப் பாசறை **"விவிலியம் காட்டும் பேசும் கலை"** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 19.01.2022 புதன்கிழமை மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. பங்கு மக்கள் 35 பேரும், ஆசிரியர் பணிப் பதிவட்டை புதுப்பித்தலுக்காக 3 பேரும் என மொத்தம் 38 பேர் கலந்துகொண்டனர்.

## பங்கில் நிகழ்ந்தவை

*வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 86. | சகரியா | இம்மானுவேல் -ஆரோன் சுஸ்மிதா | 08-01-22 | காவல்தூதர் |
| 87. | லூர்து ஹெர்மினா | ஜூலியஸ் - பாஸ்டினா | 08-01-22 | திருச்சிலுவை |
| 89. | டிவைன் | ரதராஜா - வின்சியா | 23-01-22 | சூசையப்பர் |
| 89. | ஃபேவியன் | காட்வின் - ஷைனி | 29-01-22 | பனிமயம் |

*வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் |
|---|---|---|---|
| 93. | ஜோயல் | சார்லஸ் - லியூபா | 08-01-2022 |
| 94. | லூர்டினோ போஸ் | சார்லஸ் - லியூபா | 08-01-2022 |
| 95. | மார்கிரேட் மாரிசெல் | டேரல் - மோனா | 08-01-2022 |
| 96. | ஜோஸ்வின் | ஒனாசிஸ் - கிறிஸ்டி | 08-01-2022 |
| 97. | அண்டனி பவுல் | ஆரோக்கியராஜ் - பெல்லா | 19-01-2022 |
| 98. | ஸ்னோவின் | ஜோசப் - மோட்சம் | 19-01-2022 |
| 99. | ரியான்ஸி | ஜோசப் - மோட்சம் | 19-01-2022 |
| 100. | அசினா | டெரன்ஸ் - மதனா | 29-01-2022 |
| 101. | அனிஷா | டெரன்ஸ் - மதனா | 29-01-2022 |

*ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | திருமணநாள் |
|---|---|---|
| 77. | ஜரிஸ் - இன்ஃபன்டா | 05-01-2022 |
| 78. | சந்தனசாமி பர்னாண்டஸ் - லொயோலா டார்டினி | 06-01-2022 |
| 79. | ராஜேஸ் - பிரிகானா | 10-01-2022 |
| 80. | மெர்வின் - பிந்து | 17-01-2022 |
| 81. | பிரசாத் - அனிஷா | 20-01-2022 |

*இறைவனைப் போற்றுகிறோம்*

### 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 17. | ஸ்டெல்லா | ஜோசப் | குழந்தை தெரசா | |

*செபிக்கின்றோம்*

### 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 110. | ஜேம்ஸ் பர்னாந்து | கனிஸ்டா | 31-12-2021 | கிறிஸ்து அரசர் |
| 111. | ஸ்டெல்லா பர்னாந்து | ஜோசப் பர்னாந்து | 03-01-2022 | குழந்தை தெரசா |
| 112. | பீட்டர் மஸ்கரனாஸ் | விஜிலியா | 03-01-2022 | அன்னை தெரசா |
| 113. | திபூர்சியான் | வசந்தி | 14-01-2022 | அன்னை வேளாங்கன்னி |
| 114. | மத்தேஸ் | லிபோன்ஷியா | 14-01-2022 | பரிபூரணமாதா |
| 115. | மைக்கேல் காலின்ஸ் | மேரி பிரிசில்லா | 14-01-2022 | கிறிஸ்தரசர் |

## நடைபெற இருப்பவை

- 01-02-2022 செவ்வாய் முதல் 11-02-2022 வெள்ளி வரை **புனித லூர்து அன்னை கெபி**யில் அருளிக்க ஆசீரும், திருப்பலியும் நடைபெறும். 10-02-2022 வியாழன் அன்று மாலை 6.30 மணிக்கு மாலை ஆராதனையும், 11-02-2022 வெள்ளி அன்று காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 6.30 மணிக்கு புனித லூர்து அன்னையின் சப்பர பவனியும் நடைபெறும்.
- தமிழக அரசு ஊரடங்கு தளர்வுகள் அறிவித்தால், 05.02.2022 **முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். அவை சூர்யா தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- 03.02.2022 வியாழன் மாதத்தின் **முதல் வியாழன்** அன்று லூர்து மாதா கெபியில் மாலைத் திருப்பலி முடிந்ததும், திருமணி ஆராதனை லூர்து அன்னையின் ஆசிகள்ணி என்னும் தலைப்பில் நடைபெறும்.
- பிப்ரவரி மாதத்திற்கான விவிலியப் பாசறை "புனித மரியா அன்னையரின் அன்னை" என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 15.02.2022 செவ்வாய் மாலை 06.15 மணிக்கு நடைபெறும்.
- 04.02.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- 19.02.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (16)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை குடும்ப ஆசீர்வாதங்களுக்காகணி நடைபெறும்.

**திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...**

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள், கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|
| 66. | 01.02.2022 - செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | நம்பிக்கை நலம் தரும்! |
| 67. | 08.02.2022 - செவ்வாய் | அருள்பணி. மார்டின் குமார் | அன்பு நலம் தரும்! |
| 68. | 15.02.2022 - செவ்வாய் | அருள்பணி. அந்தோனிசாமி ச.ச. | எதிர்நோக்கு நலம் தரும்! |
| 69. | 22.02.2022 - செவ்வாய் | அருள்பணி. ஃப்ளேவியன் | இறைவார்த்தை நலம் தரும்! |



## பாராட்டுகள்

நமது பங்கில் காவல்தூதர் அன்பியக் குடும்பங்கள் அலங்காரத் தட்டிலுள்ள கண் பார்வையற்றோர் இல்லத்திற்கு ரூ.4420/- மதிப்புள்ள பொருட்களை நன்கொடையாக வழங்கியதற்கு பாராட்டுகள்





மாதம் ஒரு மாதா படம் : 29

# நலம் தரும் நம் தாய்!



ஓவியர் ஜெயராஜ்

# விண்ணக வாழ்வின்
# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்."
(எசாயா 62:3)



பிறப்பு
**18.05.1927**

இறப்பு
**19.02.2017**

# B. அல்பர்ட் கொரையறா

**எக்ஸ்ப்ளோரோட்டரி ஃபிசிரிஸ்**
**சர்வே ஆஃப் இந்தியா (அரசு)**
**கொலபா, மும்பை - 5.**

*பிரிவால் வருந்தும்*

மனைவி : **சி. செசிலி பர்னாந்து**
**மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**பூட்டன்கள், பூட்டிகள் மற்றும் உற்றார் உறவினர்கள்**

*20,* மனுவேல் ஜாக்கப் சந்து
தூத்துக்குடி - *1.*



## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

புதிய ஆண்டில் சற்று நிம்மதியாக வாழலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த பலருக்கும் பொங்கல் விழா மகிழ்ச்சி நிறைந்ததாக இல்லை. காரணம், கொரோனாப் பெருந்தொற்றின் மூன்றாம் அலை தமிழகத்தைத் தாக்கத் தொடங்கி விட்டது. அதை உணர்ந்த தமிழக அரசும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஊரடங்கும், வெள்ளி, சனி, ஞாயிறுகளில் வழிபாட்டுத் தலங்களில் மக்கள் பங்கேற்புக்குத் தடையும் விதித்துள்ளது. நமது பேராலயத்தில் இந்த மூன்று நாள்களும் மக்கள் பங்கேற்பின்றியே வழிபாடுகள் நிறைவேற்றப்பட்டன. ஞாயிறு திருப்பலி தொலைக்காட்சியிலும், இணைய தளத்திலும் ஒளிபரப்பப்பட்டன.

பிப்ரவரி மாதம் எப்படி இருக்குமோ என்ற தவிப்பு மனதை வாட்டினாலும், “இதோ, உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” (மத் 28:20) என்று வாக்குறுதி தந்த இயேசு ஆண்டவர் நம்மை வழிநடத்துகிறார் என்ற நம்பிக்கையில் நம் வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம்.

பிப்ரவரி மாதம் லூர்து அன்னையின் மாதமல்லவா! கடவுளுக்குத் திருவுளமானால், வழக்கமான சிறப்புகளுடன் 01.02.2022 செவ்வாய் முதல் 11.02.2022 வெள்ளி வரை புனித **லூர்து அன்னை கெபியில்** லூர்து அன்னையின் திருவிழா கொண்டாடப்படும். பல அற்புதங்களின் தாயான லூர்து அன்னை நமக்கு அந்த அருளைப் பெற்றுத் தருவாராக!

எந்நாளும் நம்மோடு வாழும் கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!


என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

“ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்”

(எசாயா 63:3)



மண்ணில் 23.01.1937

விண்ணில் 27.02.2021

# அந்தோணி பர்னாந்து

வயது : 84

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்...

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*
மனைவி : A. மரியாள் பர்னாந்து
மற்றும்
மக்கள், மருமக்கள்
பேரன்கள், பேத்திகள்
பூட்டன்கள், பூட்டிகள்

*திருப்பலி :*
26.02.2022, சனிக்கிழமை
காலை 10.00 மணி
*இடம் :*
திருச்சிலுவை சிற்றாலயம்,
தூத்துக்குடி